## பத்திரிக்கை செய்தி

திருப்பூர் மாவட்டம், பி.என்.ரோடு, காமராஜ் நகர் 3 வது வீதியைச் சேர்ந்த மாரப்ப கவுண்டர் மகன் திரு.M.தண்டபாணி என்பவர் ஹோமியோபதி படிப்பை கோவை ஆர்.வி.எஸ் கல்லூரியில் முடித்துவிட்டு பயிற்சி மருத்துவராக இருந்துள்ளார். அவரது அண்ணன் திரு.மேகநாதன் திருப்பூரில் தனியாக ஒர்க்ஷாப் நடத்தி வந்துள்ளார். திரு.மாரப்ப கவுண்டர் அவிநாசி ராக்கியாபாளயம் கிராமத்தில் க.ச.எண். 141/பி1ல் தனக்கு இருந்த 3 ஏக்கர் விவசாய நிலத்தில் தனது மகன்கள் தண்டபாணி மற்றும் மேகநாதன் ஆகிய இருவருக்கும் தலா 93 செண்ட் நிலத்தை கடந்த 13.05.2008ம் தேதி தான செட்டில்மெண்டாக அவிநாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ளார். மேற்படி நிலத்தினை தங்களது பெயர்களில் பட்டா மாறுதல் கோரி அவிநாசி வட்டாட்சியர் அலுவலகத்தில் தனித்தனியாக 20.06.2008ம் தேதி விண்ணப்பித்துள்ளனர். பின்னர் 04.07.2008ம் தேதி தண்டபாணி அவிநாசி வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியர் பாலசுப்ரமணியம் என்பவரை சந்தித்து பட்டா மாறுதல் சம்பந்தமாக கேட்டுள்ளார். அதற்கு பாலசுப்ரமணியம் பட்டா பெயர் மாற்றம் செய்ய தனக்கு ரூ.10,000/- கொடுத்தால் தான் பெயர் மாற்றம் செய்வேன் என்று கூறியுள்ளார். மேலும், 09.07.2008ம் தேதி தண்டபாணி மண்டல துணை வட்டாட்சியர் பாலசுப்ரமணியம் அவர்களை தொலைபேசியில் தொடர்புகொண்ட போது வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரில் வரச் சொல்லியுள்ளார். அதன்படி அன்று மாலை பாலசுப்ரமணியம் அவர்களை தண்டபாணி அவரது அலுவலகத்தில் சந்தித்த போது ரூ 10,000/- லஞ்சம் என்று கேட்டுள்ளார். அப்போது தண்டபாணி தன்னால் அவ்வளவு பணம் கொடுக்க இயலாது என கூறியுள்ளார். அதற்கு பாலசுப்ரமணியம் ரூ 2,000/- குறைத்துக் கொண்டு ரூ.8,000/- கொடுத்தால் தான் இருவர் பெயரிலும் பட்டா மாறுதல் செய்து கொடுக்க முடியும் என கூறியுள்ளார். தண்டபாணிக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் புகார் கொடுத்துள்ளார். மேற்படி புகாரின் பேரில்

மண்டல துணை வட்டாட்சியர் பாலசுப்ரமணியம் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் தொடர்சியாக 10.07.2008-ம் தேதி அவிநாசி வட்டாட்சியர் அலுவலகத்தில் வைத்து மண்டல துணை வட்டாட்சியர் பாலசுப்ரமணியம் ரூ.8,000/-ஐ தண்டபாணியிடம் இருந்து லஞ்சமாக கேட்டு பெற்றபோது, கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினரால் கையும் களவுமாக கைது செய்யப்பட்டார். திருப்பூர் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்றத்தில் சுமார் 14 ஆண்டுகளாக விசாரணை நடைபெற்று வந்த வழக்கில், எதிரி பாலசுப்ரமணியம் என்பவருக்கு ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 7-ன் கீழ் 3 வருடம் கடுங்காவல் சிறை தண்டணையுடன் ரூ.3,000/- அபராதமும், ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 13 (2) r/w 13 (1)(d)ன் கீழ் 3 வருட கடுங்காவல் சிறை தண்டணையுடன் ரூ.3,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு அளிக்கப்பட்டது.